# திருக்குறள் காட்டும் தனிமனித வாழ்க்கை

**முனைவர்ஆ. ஷர்மி**

**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை**

**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**

**திருச்சிராப்பள்ளி -2**

6

**ஆய்வுச்சுருக்கம்**

உலக மொழிகள் அனைத்திலும் தொன்மை வாய்ந்தது தமிழ் மொழியாகும். திருக்குறள் காட்டும் தனிமனித வாழ்க்கை என்பது தான் மட்டுமின்றி பிறரையும், மற்ற உயிர்களையும் நேசிக்க வேண்டும். எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து இப்படித்தான் வாழவேண்டும் என்று நெறிப்படுத்திய நமது முன்னோர்கள் அதனைப் பதிவு செய்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவும் முற்பட்டனர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறளில் தன்னைச் சார்ந்தவர்களுக்கும், சமுதாயத்திற்கும் தன்னுடையக் கடமைகளைத் தவறாமல் செய்யவேண்டுமென்ற கருத்தினை முன்வைக்க வேண்டும். சங்க கால மக்கள் குழந்தையை ஈன்றெடுப்பது மட்டும் தனது கடமையாகக் கருதாமல் சான்றோனாக வளர்க்கும் முறையில் சமூக கடமையையும் உணர்ந்து செயல்பட்டதைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றது.

**முன்னுரை**

சமூகத்தில் மற்றவர்கள் மதிக்கத்தக்க சிறந்த குடிமகனாக விளங்க வேண்டுமென்றால் மனிதன் நல்லறங்களைக் கடைப்பிடித்து வாழ வேண்டும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்ற கூற்றுக்கு இணங்க விருந்தோம்பல் பண்பானது தமிழர்களிடையே சிறப்பான ஒன்றாகும். ஒவ்வொரு மனிதனும் நன்றி உணர்வுடன் வாழ்தல் வாழ்வின் உயர்வுக்கு வழி வகுக்கும் கல்வியுடன் கூடிய அறிவானது வாழ்வின் வளர்ச்சிக்கு உதவுகிறது. தன்மானம் மக்கள் செல்வம் கல்வி ஈகை விருந்தோம்பல் நன்றிபாராட்டுதல் போன்ற வாழ்க்கைக்குத் தேவையானப் பலக்கருத்துக்களையும் உயர்ந்த சிந்தனைகளையும் எடுத்துரைக்கின்ற வகையில் திருக்குறள் திகழ்கிறது. இத்தகு திருக்குறளில் காணப்பெறும் தனிமனித வாழ்க்கைச் சிறப்பினைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தன்மானம்**

வாழ்வில் நல்ல பண்புகளை ஒழுங்குடன் கடைப்பிடித்து இப்படித்தான் வாழவேண்டும் என்ற கொள்கையுடன் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். ஒழுக்கத்தை விரும்பி ஏற்று வறுமையிலும் செம்மைகாத்து, எந்நிலையிலும் வாய்மை பேசவேண்டும் என்பதே வள்ளுவர் எண்ணமாக இக்குறளில் வெளிப்பட்டுள்ளது. தமிழர்களின் தனிச்சொத்து தன்மானம். அது இல்லையேல் இறப்பதே சிறப்பு என எண்ணினர் . போரானாலும், வாழ்வானாலும் மானத்தையே உயிரெனப் போற்றினர் . வள்ளுவரும் இதனைப் பெரிதும் போற்றியுள்ளார். சமூகத்தில் மற்றவர்கள் மதிக்கத்தக்க சிறந்த குடிமகனாக விளங்க வேண்டுமென்றால் மனிதன், அன்பு ஈகை போன்ற அறநூல்களில் கூறப்பட்டுள்ள நல்லறங்களை கடைப்பிடித்து வாழ வேண்டுமென்றும் மானம் இழக்கின்ற அளவிற்குத் தமக்குக் கேடுவந்து விட்டதே, என நினைத்து உயிரை இழந்தவர் புகழை , உலகம் எந்நாளும் போற்றும்.

**இளிவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழுது ஏத்தும் உலகு-1**

அறநூலான நாலடியாரும் மானம் குறித்து,

"**வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர் 2** என்று விளம்புகிறது. இக்கருத்துகள் தமிழர்கள் மானத்தின் அடையாளங்களை நிலைநிறுத்துகின்றன. தன் ஒரேமகன் களத்தில் புறப்புண்பட்டு மாண்டான் என்ற செய்திகேட்டு வெகுண்டதாய் , அவ்வாறெனில் அவன்பாலுண்ட அங்கத்தை வெட்டிஎறிவேன் என்று வஞ்சினம் கூறிக் களம் புகுகிறாள் . மகன் விழுப்புண் பெற்றுக்கிடப்பதைப் பார்த்து மகிழ்வுற்றதான நிலை மானத்தின்மீது கொண்டிருந்த உயர்வினை வெளிப்படுத்துகிறது . சிறைப்பட்டசேரன் கணைக்கால் இரும்பொறை நீர்கேட்டுச் சேவகன் தாமதமாகக் கொணர்ந்து இடக்கையால் வைத்ததால் அருந்தாமல் உயிர்விட்ட செய்தியும் மானத்தின் சிறப்பை விளக்குகிறது.

**மக்கள் செல்வம்**

ஒருவன் தனது வாழ்நாளில் மணம் செய்துகொண்டு மக்களைப் பெறுதல் பெரும் பேராக கருதப்படுகிறது. அவ்வின்பத்தை நுகராத அவர் பிறப்பின் பயனை அடையாதவர் என்பதை திருவள்ளுவர் ,

'**குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள்**
**மழலைச் சொல் கேளாதவ ர்'3**

என்கிறார்.

இதனையே புறநானூற்றுப் பாடல்

**‘படைப்புப் பல படைத்து பலரோடு உண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்ந்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே’4**

அறிவையும் உள்ளத்தையும் மயக்கும் அழகிய குழந்தைகளைப் பெறாதவர்கள் வாழ்நாளில் அடையவேண்டிய பயனை அடையாதவர் என்பதன் மூலம் வழிவழியாக சந்ததியை உருவாக்குதல் வாழ்வில் மேன்மையான ஒன்றாகக் கருத வேண்டும் என்றும் மன்னர்கள் வீரம், கொடை இவற்றில் மனதை செலுத்துதல் மட்டுமின்றி மக்கள் செல்வத்தின் சிறப்பை போற்றிய நிலையினையும்

**‘அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ்5**

தம் மக்களின் சிறு கையினால் அளாவிய சோறு சுவைமிக்க அமிழ்தினும் இனிமையுடைத்து என்கிறார் அறிவுடைநம்பி. புதல்வர்களைப் பெற்றவர்கள் இம்மை உலகத்திலும் புகழோடு விளங்கி மறுமை உலக வாழ்வினைக் குற்றமின்றி எய்தினர் என்ற பெண்களின் நம்பிக்கையும் பிள்ளைப் பேற்றினால் அடைந்த மகிழ்வினையும் கணவனும் மனைவியுமாக உரிமை பூண்டு வாழும் அன்பு வாழ்க்கையின் மணிமுடியாகத் திகழ்வது குழந்தைச் செல்வமாகும்

சங்க கால மக்கள் குழந்தையை ஈன்றெடுப்பது மட்டும் தனது கடமையாகக் கருதாமல் சான்றோனாக வளர்க்கும் முறையில் சமூக கடமையையும் உணர்ந்து செயல்பட்டதைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றது

**கல்வியின் பெருமை**

கல்விச் செல்வம் மனித மனங்களை வளரச் செய்கிறது. கல்வி தன்னை உயர்த்துவதைக் காட்டிலும், தான் சார்ந்த சமூகத்தையும் நாட்டையும் பெருமையுடையச் செய்கின்றது. உலகினை உணர்ந்து வாழக் கல்வி இன்றியமையாதது. என்பதனை வள்ளுவர்,

**“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை”6**

ஒருவரது வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது கல்வியாகும். கல்வியின் சிறப்பை நாலடியார் ,

**உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,**

**பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே -7** என்று கூறுகிறது.

மனிதன் காலங்காலமாகத் தன் அனுபவங்களைத் தொகுத்து தனக்குப் பின்வரும் சமுதாயத்திற்கு தன் மகனைக் கல்வி கேள்விகளில் சிறந்தவன் என்று சான்றோர்கள் கூறக்கேட்கும் தாய், அவனைப் பெற்ற பொழுதில் அடைந்த மகிழ்ச்சியை விட மிக்க மகிழ்ச்சி அடைவாள் என்பதனை,

**“ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**

**சான்றோன் எனக்கேட்ட தாய்”8**

**என வள்ளுவர் கூறுகிறார்.**

**பிச்சைப்புக்காயினும் கற்றல் இனிது9 என்று விளக்குகிறது.**

கல்லாதவர்கள்விலங்குகளுக்குஒப்பாவார்என்பதனைவள்ளுவர்,

**ஈகை:**

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய அறநூல்கள் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்குத் தோன்றியவையாகும். இதனைத் தொல்காப்பியர்

**“அந்நிலை மருங்கின் அறமுதலாகிய**

**மும்முதற் பொருட்கும் உரிய என்ப’ என்றும்**

**“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை’10 என்றும்** கூறுகிறார். மனிதன் நேர்மையாக வாழ அறம் கருவியாகிறது. பொருளையும் இன்பத்தையும் அறத்தின் வாயிலாகவே மனிதன் அடைதல் வேண்டும். எளிய மக்களுக்கு செய்யப்படுகிற உதவியை,

**“ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்**
**ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை”-11**

என்று மணிமேகலை காப்பியம் கூறுகின்றது.

**ஈதலின் சிறப்பினை,**

**'செல்வத்துப் பயனே ஈதல்**

**துய்ப்போம் எனினே தப்புந பலவே' -12**

தம்மிடம் உள்ள செல்வத்தைத் தாமே துய்க்கலாம் என்று எண்ணுவது தவறாகும். பிறருக்கு உதவி செய்வதன் மூலம் நீங்கள் உங்களின் சுமையைக் குறைத்துக் கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

**திருமந்திரம்தந்ததிருமூலர்அவர்கள்ஈகைகுறித்து**

**"யாவர்க்குமாம்இறைவற்குஒருபச்சிலை**
**யாவர்க்குமாம்பசுவிற்குஒருவாயுறை**
**யாவர்க்குமாம்உண்ணும்போதுஒருகைப்பிடி**
**யாவர்க்குமாம்பிறர்க்குஒருஇன்னுரைதானே" - 13**

ஈகையின் சிறப்பை உணர்த்த ஔவையும் "ஈவது விலக்கேல்" என்றுகூறுகிறார்.

**விருந்தோம்பல்**

தொன்மைச்சிறப்புவாய்ந்ததமிழ்மக்களின்அடையாளங்களுள்மிகச்சிறந்ததாக "விருந்தோம்பல்" இருந்துவருகிறது.

**"விருந்தேதானும்புதுவதுகிளந்தயாப்பின்மேற்றே" 14**

தொல்காப்பியர்வீட்டிற்குப் புதிதாக வந்தவரை இன்முகத்துடன் வரவேற்று முகமலர்ந்து அகமலர்ந்து, தேவையறிந்து உணவு பரிமாறுவதையே "

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாம்தலை 15**

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து"16** என்று திருவள்ளுவர் வந்த விருந்தினர்களின் முகம் வாடாதவாறு விருந்தோம்பல் செய்வதை

**செல்விருந்து ஓம்பிவருவிருந்து பார்த்திருப்பான்நல்விருந்து வானத்தவர்க்கு-17** இப்படி, உயர்குணம் உள்ளவர்களை வானுலகத் தேவர்கள் நல்விருந்தினர்களாக எதிர்பார்த்துக் காத்திருப்பராம்.என்று வள்ளுவம் நிறுவுகிறது.

**விருந்துஇல்லோர்க்குஇல்லை, பொருந்தியஒழுக்கம் - 18**

**"அமிழ்துஅட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்**

**வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை"19**

என்ற பாடல் வழி அறிய முடிகிறது.

**இப்பண்பாட்டின் தொடர்ச்சியை மணிமேகலை,**

**மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே”20**

என பண்டைத் தமிழர்கள் தம்மை நாடிவந்த விருந்தினரின் பசித்துன்பத்தை நீக்குதலைச் சிறந்த அறமாகக் கருதினர்.

**கடன் கொண்டும் செய்வன செய்தல் இனிதே**

என இனியவை நாற்பது மொழியும் இதே கருத்தினை வலியுறுத்தும்.

பெண் எல்லோரிடமும் கடன் வாங்கிவிட்ட நிலையில் தன்னிடம் இருந்த விதைக்காக வைத்திருந்த தினையை உரலிற் பெய்து குற்றி உணவிட்டாள் என்ற செய்தியை புறநானூற்று பாடலால் அறியமுடிகின்றது. இதே கருத்தினை வலியுறுத்தும் விதமாக வள்ளுவர்,

**“வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி”**

மிச்சில் மிசைவான் புலம்” 22என்ற குறள்.மூலம் அறியமுடிகின்றது.

**நன்றியறிதல்**

நன்றியறிதல்என்பதுஉயரியசிந்தனையாகவும்மகத்தானசக்தியாகவும்இருந்துவருகிறது.

**“செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**

**வானகமும் ஆற்றல் அரிது.” 23என்ற** குறள் மூலம் வெளிப்படுத்துகிறார். இதன்வழி, பிறருக்கு எதுவும் கொடுக்காத போதும் பிறர் உதவிசெய்தால் அந்த உதவியைப் பூமியைவிடப் பெரியதாகவும் , விண்ணை உயர்ந்ததாகவும் தமிழர்கள் கருதுவர் என்பது பெறப்படுகிறது. இக்குறளுக்கு பரிமேலழகர், தனக்கு ஒருவர் ஓர் உதவி செய்யாதிருக்க , ஒருவன் பிறருக்குச் செய்த உதவிக்கு விண்ணுலகும் மண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தல் அரிது ’ என்று விளக்கம் தந்துள்ளார்.

**நிறைவுரை**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறளில் தன்னைச் சார்ந்தவர்களுக்கும்,சமுதாயத்திற்கும் தன்னுடையக் கடமைகளைத் தவறாமல் செய்யவேண்டுமென்ற கருத்தினை தன்மானம் மக்கள் செல்வம் கல்வி ஈகை

விருந்தோம்பல் நன்றிபாராட்டுதல் போன்ற வாழ்க்கைக்குத் தேவையானப் பல கருத்துக்களை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. ஐயர் ஸ்ரீ வி.வி.எஸ் திருக்குறள் எ -970
2. நாலடியார் - பா 300
3. ஐயர் ஸ்ரீ வி.வி.எஸ் திருக்குறள் எ - 66
4. சோமசுந்தரனார் பொ.வே புறநானூறு – பா 188
5. ஐயர் ஸ்ரீ வி.வி.எஸ் திருக்குறள். எ - 64
6. ஐயர் ஸ்ரீ வி.வி.எஸ் திருக்குறள .எ - 400
7. சோமசுந்தரனார் பொ.வே புறநானூறு பா - 210
8. ஐயர் ஸ்ரீ வி.வி.எஸ் திருக்குறள்.எ - 69
9. வெற்றி வேற்கை - சோமசுந்தரனார் பொ.வே -56
10. இளம்பூரணார் தொல்காப்பியம் 1363
11. சோமசுந்தரனார் பொ.வே மணிமேகலை 765
12. சோமசுந்தரனார் பொ.வே புறநானூறு 189
13. திருமூலர் திருமந்திரம் 252
14. இளம்பூரணார் தொல்காப்பியம் - 551
15. ஐயர் ஸ்ரீ வி.வி.எஸ் திருக்குறள் .எ 322
16. ஐயர் ஸ்ரீ வி.வி.எஸ் திருக்குறள் .எ - 90
17. ஐயர் ஸ்ரீ வி.வி.எஸ் திருக்குறள் .எ - 86ஷ
18. கொன்றை வேந்தன்- பா. எ - 83
19. சோமசுந்தரனார் பொ.வே. புறநானூறு -10
20. மணிமேகலை –கழக வெளியீடு 95 -96
21. இனியவை நாற்பது பா. எ - 6505
22. ஐயர் ஸ்ரீ வி.வி.எஸ் திருக்குறள் .எ 85
23. ஐயர் ஸ்ரீ வி.வி.எஸ் திருக்குறள் .எ 101

துணைநூற் பட்டியல்

1.திருக்குறள் புதிய உரை புலியூர்க் கேசிகன்
பூம்புகார் பதிப்பகம் - 2010
2 திருமந்திரம் பாலூர் கண்ணப்ப முதலியார்
வானதி பதிப்பகம்- சென்னை- 1965.
3..இளம்பூரணர் தொல்காப்பியம்பொருளதிகாரம்
சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழகம்
சென்னை -1
ஐந்தாம்பதிப்பு மார்ச் 1974

4 ரா.சீனிவாசன் புறநானூறுமூலமும்உரையும்
சைவசிந்தாந்தநூற்பதிப்புக்கழகம்
சென்னை -1
3. நாராயண வேலுப்பிள்ளை பதிணென்கீழ்க்கணக்குநூல்கள்
நர்மதாபதிப்பகம்
சென்னை -1
4. நாலடியார் தெளிவுரை புலியூர்க்கேசிகன்சாரதாபதிப்பகம்
சென்னை – 600005